DINAMANI

...லைக் கழுவி உடலை வளர்
...ரக்ஸ்
...ல், மலச்சிக்கலால்
..., வயிற்று உப்பிசம்,
... உஷ்ணம், பித்தம்,
நாக்குப் பூச்சிகள்
...ல் தூய்மை பெறுகிறது.
...பகோணம்–612 001.
0435) 242 0005.
...ரிலும் கிடைக்கும்

தினமணி
புதன்கிழமை, 29 செப்டம்பர் 2021

செவ்வாய்தோறும்
தினமணியுடன்...
தினமணி இளைஞர்மணி
படியுங்கள்

# ...களுக்கான 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிப்பு



வீ.எஸ். ராஜம் | பொன். கோதண்டராமன் | இ. சுந்தரமூர்த்தி | ப. மருதநாயகம் | கு. மோகனராசு



மறைமலை இலக்குவனார் | கா. ராஜன் | உல்ரிக் நிக்லாஸ் | ஈரோடு தமிழன்பன் | கு.சிவமணி

சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச்சான்றிதழும், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவச் சிலையும் அடங்கியதாகும்.

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள அறிஞருக்கு இந்த விருது வழங்கப்படும்.

அறக்கட்டளை தொடங்கப்பட்ட பின்னர் 2009–ஆம் ஆண்டுக்கான முதல் விருது பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலாவுக்கு 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் நிறுவனத்தின் 8–ஆவது ஆட்சிக்குழுக் கூட்டம் முதல்வர் தலைமையில் கடந்த ஆகஸ்ட் 30–ஆம் தேதி நடைபெற்றது.

**யார் யாருக்கு விருது?:** இதையடுத்து முதல்வரால் அமைக்கப் பெற்ற விருதுத் தேர்வுக்குழுவினரால் கீழ்க்காணும் பத்து விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதன் விவரம்:

1. 2010– **முனைவர் வீ.எஸ். ராஜம்**– அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழக தெற்காசிய பிராந்திய கல்வித் துறையின் முன்னாள் பேராசிரியர்.
2. 2011– **பேராசிரியர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)** – (முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)
3. 2012 – **பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**– (முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்)
4. 2013 – **பேராசிரியர் ப. மருதநாயகம்**- (முன்னாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், முன்னாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்)
5. 2014– **பேராசிரியர் கு. மோகனராசு**– (முன்னாள் பேராசிரியர் மற்றும் தலைவர், திருக்குறள் ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)
6. 2015– **பேராசிரியர் மறைமலை இலக்குவனார்**– (முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி)
7. 2016 – **பேராசிரியர் கா. ராஜன்** – (முன்னாள் பேராசிரியர், வரலாற்றுத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம்),
8. 2017 – **பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ்**– ஜெர்மனியின் கொலாகின் பல்கலைக்கழக இந்தியவியல் மற்றும் தமிழ்த் துறைத் தலைவர்.
9. 2018– **கவிஞர் ஈரோடு தமிழன்பன்**– (முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக் கல்லூரி, சென்னை).
10. 2019 – **பேராசிரியர் கு.சிவமணி**– (முன்னாள் முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் மற்றும் திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை).

**விரைவில் வழங்கப்படும்:** தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்நாட்டு பெருமக்களின் முன்னிலையில் மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவில் கூடிய விரைவில் விருது வழங்கப்படவுள்ளது.

THE HINDU
29 SEP 2021
PAGE 6

# 10 scholars to receive classical Tamil award

## It was instituted by former CM Karunanidhi

SPECIAL CORRESPONDENT
CHENNAI

As many as 10 Tamil scholars and academicians will receive the Kalaignar M. Karunanidhi Classical Tamil Award from the Central Institute of Classical Tamil in Chennai for the years 2010 to 2019.

Former professor of the Pennsylvania University Dr. V.S. Rajam would receive the award for 2010 and former vice-chancellor of the University of Madras Pon. Kothandaraman would receive it for 2011, an official release said on Tuesday.

Former vice-chancellor of Tamil University Prof. E. Sundaramoorthy and former director of Puducherry Institute of Linguistics and Culture Prof P. Marudhanayagam would receive the award for 2012 and 2013 respectively.

Former chairperson of the Department of Thirukkural Research Endowment in the University of Madras Prof. K. Mohanarasu would receive it for 2014 and former professor of Tamil at Presidency College in Chennai, Maraimalai Ilakkuvanar, for 2015.

**The award was instituted in 2009 with Prof. Asko Parpola from Finland being its first recipient at the World Classical Tamil Conference in Coimbatore in 2010**

Prof K. Rajan, formerly with the Department of History in Pondicherry University, would be conferred with the award for 2016 and Prof. Ulrike Niklas, head of the Institute of Indology and Tamil Studies of Cologne University in Germany would receive the award for 2017. For 2018 and 2019, Prof. 'Erode' Thamizhanban, formerly with The New College in Chennai and Prof. K. Sivamani, formerly with Karanthai Pulavar College in Thanjavur and with Thiruvalluvar College in Tirunelveli, would receive the awards respectively.

The award was instituted in 2009 with Prof. Asko Parpola from Finland being its first recipient at the World Classical Tamil Conference in Coimbatore in 2010.

Then Chief Minister M. Karunanidhi created this award out of his personal funds as an endowment in his name for classical Tamil research in the Central Institute of Classical Tamil. From the endowment, an award would be conferred on scholars and researchers of eminence every year.

The award carries a cheque for ₹10 lakh, a citation plaque and a bronze replica of the donor. The award is given for the best contribution to classical Tamil studies by a researcher in archaeology, epigraphy, numismatics, ancient grammar and linguistic study, literary criticism, creative writing, translation, music, dance, drama, painting and sculpture.

THE NEW INDIAN EXPRESS

29 SEP 2021

PAGE 4

## 10 scholars selected for Semmozhi Tamil Award

Chennai: The Central Institute of Classical Tamil (CICT) has chosen 10 Tamil scholars for the years 2010 to 2019 for Kalaignar M Karunanidhi Semmozhi Tamil Award. The eighth council meeting of the CICT was held on August 30. The award carries ₹10 lakh and a citation. Former chief minister M Karunanidhi established Semmozhi Tamil Research Trust in the CICT by donating ₹1 crore. On behalf of this Trust, the Kalaignar M Karunanidhi Semmozhi Tamil Award is presented to a scholar every year who contributes to archaeology, numismatics, literature, linguistics, etc. The first award for the year 2009 was presented to a Tamil scholar from Finland, Asko Parpola in 2010. ENS

DINAKARAN

29 SEP 2021.

PAGE 9

தினகரன்

## 2010-2019ம் ஆண்டு வரையிலான கலைஞர் மு.கருணாநிதி

# செம்மொழித் தமிழ் விருதுகள் அறிவிப்பு

### விருதாளர்கள் பட்டியல் வெளியீடு

சென்னை, செப். 29: 2010 முதல் 2019 வரையிலான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான விருதாளர்கள் பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கை:

முத்தமிழறிஞர் கலைஞரின் பெரு முயற்சியால் இந்தியாவில் முதன்முறையாக தமிழ் மொழியானது 2004ம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. பின்னர் 2008ம் ஆண்டில் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் என தன்னாட்சி பெற்ற நிறுவனமாக சென்னையில் அமைக்கப்பட்டது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் முதலமைச்சர் ஆவார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1கோடி நிதியினை வழங்கி கலைஞர்.மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளையை அந்நிறுவனத்தில் நிறுவினார்.

அவ்வறக்கட்டளையின் வாயிலாக செம்மொழித் தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் கலைஞர்.மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படுகிறது. இவ்விருது இந்தியாவிலேயே உயரிய விருதாக ரூ.10 லட்



சம் பரிசுத்தொகையுடன் பாராட்டுச்சான்றிதழும், கலைஞர் மு. கருணாநிதி உருவச்சிலையும் அடங்கியதாகும். தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள அறிஞருக்கு இவ்விருது வழங்கப்படும்.

அறக்கட்டளை துவங்கப்பட்ட பின் 2009ம் ஆண்டிற்கான முதல் விருது பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலாக்கு 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டது.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர். மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. தற்போது முதலமைச்சர் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. அவ்வகையில் நிறுவனத்தின் 8வது ஆட்சிக்குழுக் கூட்டம் முதலமைச்சர் தலைமையில் 30.8.2021 அன்று நடைபெற்றது.

அதன்படி, முதலமைச்சரால் அமைக்கப் பெற்ற விருதுத் தேர்வுக்குழுவினரால் கீழ்க்காணும் பத்து விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:

2010 - முனைவர் வீ.எஸ். இராஜம், 2011 - பேராசிரியர் பொன். கோதண்டராமன் (மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை), 2012 - பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்), 2013 - பேராசிரியர் ப. மருதநாயகம் (மேனாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், மேனாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்),

2014 - பேராசிரியர் கு.மோகனராசு (மேனாள் பேராசிரியர் &தலைவர், திருக்குறள் ஆய்வுமையம், சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை), 2015 - பேராசிரியர். மறைமலை இலக்குவனார் (மேனாள் தமிழ்ப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி), 2016 - பேராசிரியர் கா.ராஜன் (மேனாள் பேராசிரியர், வரலாற்றுத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம்), 2017 - பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ், 2018 - கவிஞர் ஈரோடு தமிழன்பன் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக்கல்லூரி, சென்னை), 2019 - பேராசிரியர் கு.சிவமணி (மேனாள்முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் & திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை).

2010 முதல் 2019 வரையிலான கலைஞர்.மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான விருதாளர்கள் பட்டியல் மீது 30.8.2021 அன்று நடைபெற்ற செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 8வது ஆட்சிக்குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்குரிய கலைஞர்.மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்நாட்டு பெருமக்களின் முன்னிலையில் மாநில அளவிலான தமிழ் மொழி சார்ந்த விழாவில் கூடிய விரைவில் வழங்கப்படவுள்ளது. மேலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்கான பணிகள் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

DINATHANTHI

29 SEP 2021

PAGE 9

## 2010-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டு வரை

# செம்மொழி தமிழ் விருது பெறுபவர்கள் பெயர் பட்டியல்

# தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, செப்.29-

2010-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டு வரை செம்மொழி தமிழ் விருதுக்கு தேர்வானவர்களின் பெயர் பட்டியலை தமிழக அரசு வெளியிட்டு உள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### செம்மொழி தமிழ் விருது

முத்தமிழறிஞர் கருணாநிதியின் முயற்சியால் இந்தியாவில் முதன் முறையாக தமிழ் மொழியானது 2004-ம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 2008-ம் ஆண்டு செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் என்ற தன்னாட்சி பெற்ற நிறுவனம் சென்னையில் அமைக்கப்பட்டது. செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் முதல்-அமைச்சர் ஆவார்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி கருணாநிதி தனது சொந்த நிதியில் இருந்து ரூ.1 கோடி வழங்கி கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழாய்வு அறக்கட்டளையை நிறுவினார். இதன்மூலம் செம்மொழி தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கிய அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படுகிறது.

### ரூ.10 லட்சம் பரிசுத்தொகை

இந்தியாவிலேயே உயரிய விருதான இந்த விருது ரூ.10 லட்சம் பரிசுத்தொகை, பாராட்டுச் சான்றிதழ், கருணாநிதி உருவச்சிலையுடன் வழங்கப்படுகிறது.

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில் செம்மொழித் தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள அறிஞருக்கு இந்த விருது வழங்கப்படும்.

அறக்கட்டளை தொடங்கிய பின்பு 2009-ம் ஆண்டிற்கான முதல் விருது பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலாவுக்கு 2010-ம் ஆண்டு கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

### 10 பேர் தேர்வு

2010 முதல் 2019-ம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளுக்கு இந்த விருது வழங்கப்படாமல் இருந்தது. இந்தநிலையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கடந்த மாதம் 30-ந் தேதி நடந்த செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 8-வது ஆட்சிக்குழு கூட்டத்தில் விருதாளர்களை தேர்வு செய்ய விருது தேர்வுக்குழு ஏற்படுத்தப்பட்டது.

அதன்படி இந்த தேர்வுக் குழு மூலம் 2010-ம் ஆண்டுக்கான விருதுக்கு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் தெற்கு ஆசிய மண்டல படிப்புகள் துறையின் முன்னாள் மூத்த விரிவுரையாளரான வீ.எஸ்.ராஜம் தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

2011-ம் ஆண்டுக்கான விருதுக்கு சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொன். கோதண்டராமனும், 2012 -ம் ஆண்டுக்கான விருதுக்கு தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தியும், 2013 -ம் ஆண்டுக்கான விருதுக்கு புதுச்சேரி பல்கலைக்கழக முன்னாள் பதிவாளரும், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் இயக்குனருமான ப. மருதநாயகமும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

### திருவள்ளுவர் கல்லூரி முதல்வர்

2014-ம் ஆண்டுக்கான விருதுக்கு சென்னை பல்கலைக்கழக திருக்குறள் ஆய்வு மையத்தின் முன்னாள் தலைவர் கு.மோகனராசுவும், 2015-ம் ஆண்டுக்கான விருதுக்கு மாநிலக்கல்லூரி முன்னாள் தமிழ்பேராசிரியர் மறைமலை இலக்குவனாரும், 2016 -ம் ஆண்டுக்கான விருதுக்கு புதுச்சேரி பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் கா.ராஜனும், 2017-ம் ஆண்டுக்கான விருதுக்கு ஜெர்மனி கோலேக்னே பல்கலைக்கழகத்தின் இந்தியர்கள், தமிழ் ஆய்வுகள் நிறுவனத்தின் தலைவருமான உல்ரிக் நிக்லாசும், 2018-ம் ஆண்டுக்கான விருதுக்கு சென்னை புதுக்கல்லூரி முன்னாள் தமிழ் பேராசிரியர் கவிஞர் ஈரோடு தமிழன்பனும், 2019-ம் ஆண்டுக்கான விருதுக்கு நெல்லை பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் கரந்தை புலவர் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் முதல்வர் கு.சிவமணியும் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

இவர்களுக்கு விரைவில் விருது வழங்கப்பட உள்ளது. 2020, 2021 மற்றும் 2022-ம் ஆண்டுக்கான விருதுக்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

DINAMALAR

29 SEP 2021

PAGE 4

# 'கருணாநிதி செம்மொழி விருது' 10 பேருக்கு அறிவிப்பு

**சென்னை, செப். 29–**

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும், 'கருணாநிதி செம்மொழி தமிழ் விருது' பெற, 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி, கருணாநிதி தன் சொந்த நிதியில் இருந்து, 1 கோடி ரூபாய் வழங்கி, கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளையை, அந்நிறுவனத்தில் நிறுவினார்.

அந்த அறக்கட்டளை சார்பில், செம்மொழி தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கிய அறிஞர்களுக்கு ஆண்டுதோறும், 'கருணாநிதி செம்மொழி தமிழ் விருது' வழங்கப்படுகிறது. விருதாளர்களுக்கு, 10 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் பாராட்டு சான்றிதழும், கருணாநிதி உருவச்சிலையும் தரப்படும்.

இந்த விருது, 2010 முதல் 2019 வரையிலான, 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. புதிய அரசு பொறுப்பேற்றதும், முதல்வர் தலைமையில், அந்த நிறுவனத்தின் எட்டாவது ஆட்சிக் குழு கூட்டம், ஆக., 30ல் நடந்தது. அதில், முதல்வரால் அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவினர் தேர்வு செய்த 10 விருதாளர்களுக்கு, விருது வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி, 2010ம் ஆண்டுக்கு, பென்சில்வேனியா பல்கலை முன்னாள் முதுநிலை விரிவுரையாளர் ராஜம்; 2011 – சென்னை பல்கலை முன்னாள் துணை வேந்தர் கோதண்டராமன்; 2012 – தமிழ் பல்கலை முன்னாள் துணை வேந்தர் சுந்தரமூர்த்தி; 2013 – புதுச்சேரி பல்கலை முன்னாள் பதிவாளர் மருதநாயகம்.

கடந்த, 2014 – சென்னை பல்கலை திருக்குறள் ஆய்வு மையத்தின் முன்னாள் தலைவர் மோகனராசு; 2015 – மாநில கல்லூரி முன்னாள் தமிழ் பேராசிரியர் மறைமலை இலக்குவனார். 2016 – புதுச்சேரி பல்கலை வரலாற்றுத் துறை முன்னாள் பேராசிரியர் ராஜன்; 2017 – ஜெர்மனி பல்கலை முன்னாள் பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ்.

தொடர்ந்து, 2018 – சென்னை புதுக் கல்லூரி முன்னாள் தமிழ் பேராசிரியர் ஈரோடு தமிழன்பன்; 2019 – தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரி முன்னாள் முதல்வர் சிவமணி ஆகியோர் விருதாளர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

THE HINDU (TAMIL)

29 SEP 2021

PAGE 2

### ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட 10 அறிஞர்களுக்கு

# 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிப்பு

■ சென்னை

ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட 10 தமிழ் அறிஞர்களுக்கு 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட அறிவிப்பு:

மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி, தனது சொந்த நிதியிலிருந்து ரூ. ஒரு கோடி வழங்கி, 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை'யை நிறுவினார்.

**ரூ.10 லட்சம் பரிசுத் தொகை**

அதன்படி, தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் உள்ளிட்டவையில் சிறந்த பங்களிப்பை வழங்கிய அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்படுகிறது. அதனுடன், இந்தியாவிலேயே அதிக தொகையாக ரூ.10 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும், கருணாநிதியின் உருவச்சிலையும் வழங்கப்படும்.

முதல்முறையாக, பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா-வுக்கு 2010-ம் ஆண்டு ஜூன் 23-ம் தேதி கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் வழங்கப்பட்டது.

இந்நிலையில், 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' 2010 முதல் 2019-ம் ஆண்டு வரை 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. இதைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலினால் அமைக்கப்பட்ட விருது தேர்வுக் குழுவினரால் 10 ஆண்டுகளுக்கும் சேர்த்து 10 அறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**பொன்.கோதண்டராமன்**

அதன்படி, 2010-ம் ஆண்டுக்கான விருது பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் வீ.எஸ்.ராஜத்துக்கு வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து, சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொன்.கோதண்டராமன் (2011), தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி (2012), புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவன முன்னாள் இயக்குநரும் புதுச்சேரி பல்கலைக்கழக முன்னாள் பதிவாளருமான பேராசிரியர் ப. மருதநாயகம் (2013), சென்னை பல்கலை. திருக்குறள் ஆய்வு மையத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் கு. மோகனராசு (2014) ஆகியோருக்கும்,

சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் மறைமலை இலக்குவனார் (2015), புதுச்சேரி பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முன்னாள் பேராசிரியர் கா.ராஜன் (2016), ஜெர்மனியின் கொலோன் பல்கலைக்கழகத்தின் இந்தியவியல் மற்றும் தமிழ் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ் (2017), சென்னை புதுக் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் (2018) ஆகியோருக்கும்,

தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரி மற்றும் நெல்லை திருவள்ளுவர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் கு.சிவமணி (2019) ஆகியோருக்கும் வழங்க செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் 8-வது ஆட்சிக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் 2020, 2021, 2022-ம் ஆண்டுகளுக்கான 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது'களுக்கான முன்மொழிவுகளைப் பெற விளம்பரம் வெளியிட ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்குரிய விருது, மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவில் விரைவில் வழங்கப்படவுள்ளது. மேலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.